T.C : 19

001/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்துத் தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியை – தமிழாக்கம் செய்க. (10)

There is a beauty in nature. The pathless woods give us pleasure. We sit under the green trees, we enjoy the beauty of multi coloured flowers. The songs of the birds fill the air with sweet music.

Trees are very useful to us. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from oil seeds of some trees. The leaves and fruits of trees are used to prepare medicines.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக (2 × 15 = 30)

2. காலத்தை வெல்லும் கணினி.

3. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

4. ஆண்டு ஊதிய உயர்வு வேண்டி விண்ணப்பம் (1 × 10 = 10)

[Turn over

## பகுதி — II

5. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (5 × 1 = 5)

பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார். இவர் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். இவர் அநபாயச் சோழனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர். இவர், உத்தமச்சோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர். இவரைத் தெய்வச் சேக்கிழார் என்றும், தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றுவர். இவரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மரின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரியபுராணம் என்னும் பெயர் பெற்றது. இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார். உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் 'பெரியபுராணம்' என்பார் திரு.வி.கலியாண சுந்தரனார்.

வினாக்கள் :

(அ) சேக்கிழார் எங்கு பிறந்தார்? யாரிடம் அமைச்சராய் இருந்தார்?

(ஆ) சேக்கிழாரின் சிறப்புகளைக் கூறுக.

(இ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் சேக்கிழாரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

(ஈ) பெரியபுராணத்தைப் பற்றி திரு.வி.க. கூறுவன யாவை?

(உ) பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள அடியார்கள் எத்தனை பேர்?

6. கொடுக்கப்பட்டுள்ள உரையாடலை நிறைவு செய்க. (5)

பள்ளி வகுப்பறையில்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | மாணவர்களே திருக்குறளை எழுதியவர் யார்? |
| மாணவர் 1 | : | ____________ திருக்குறளை எழுதினார் ஐயா. |
| ஆசிரியர் | : | திருக்குறளில் முதற் பாடலில் முதலில் தொடங்கும் சொல் எது? |
| மாணவர் 2 | : | ____________ |
| ஆசிரியர் | : | திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர் ஒன்று கூறு? |
| மாணவர் 3 | : | ____________ |
| ஆசிரியர் | : | திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் எத்தனை? |
| மாணவர் 4 | : | ____________ |
| ஆசிரியர் | : | திருக்குறளில் எத்தனை குறட்பாக்கள் உள்ளன? |
| மாணவர் 5 | : | ____________ |

## பகுதி — III

### மொழிப் பயிற்சி (40 × 1 = 40)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

7. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை எத்தனை?

8. 108 – எண்ணை எழுத்தால் எழுதுக.

9. பெருமை – சொற்றொடரில் அமைத்து எழுதுக.

10. August திங்களின் (மாதத்தின்) பெயரைத் தமிழில் எழுதுக.

11. புதன் கிழமைக்கு அடுத்த கிழமை எது?

12. ஆடிக்கு முந்தைய திங்கள் (மாதம்) எது?

13. விடுபட்ட தமிழ் எழுத்துகளை எழுதுக.

ழ, ———, ———, ழீ, ழு, ———, ———

14. அகர வரிசைப்படுத்தி எழுதுக.

சார்பு, சுக்கு, சிறுகதை, சட்டம், சீர்

15. உயிர்மெய்க்குறில் எழுத்துகளைக் கண்டறிந்து எடுத்து எழுதுக.

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்

உரிய நிறுத்தற் குறி இடுக.

16. முகிலா யார் வந்திருக்கிறார் பார் என்றார் குழலி

17. எழுத்து அசை சீர் தளை அடிதொடை என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்.

பிழையைத் திருத்தி எழுதுக :

18. அரசன் வந்தது

19. கபிலன் பேசினாள்

விடைக்கேற்ற வினா எழுதுக.

20. செய்திப் படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.

21. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது

வினைச்சொற்களை எடுத்து எழுதுக :

22. செய்தி பரவும்

23. ஆந்தை அலறியது

24. குறில், நெடில் பிழையைக் கண்டறிந்து எழுதுக.

ஒன்று வங்கினால் ஒன்று இலவசம்.

25. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் உருவாக்குக.

சொல்

26. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

உலகம் யாவையும் தாமுல வாக்கலும்

நிலை பெருத்தலும் நீக்கலும் நீங்கலா

27. இடை எழுத்தை நீக்கி இடையில் இரண்டு எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொல் ஒன்றை எழுதுக.

அறம்

28. இருபொருள் தருக.

நிறை

29. பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றுக

அடமழை பெய்ததை தாவாரத்தில் நின்று பார்த்தான்.

30. உரிய வினை மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

வேடன் ———— அம்பு யானையை வீழ்த்தியது (எய்த/செலுத்திய)

31. பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக :

ஷேத்திரங்கள்.

பொருத்துக.

32. வினையே ஆடவர்க்குயிர் – தாராபாரதி

33. முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை – குறுந்தொகை

34. உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே – தொல்காப்பியர்

35. விரல்கள் பத்தும் – திருமூலர்

36. பால் வகையை எழுதுக :

வண்டுகள்

37. திணை வகையை எழுதுக :

கோலமயில்

38. Courtfee stamp கலைச் சொல்லைத் தமிழாக்கம் தருக.

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

39. மெய்தான் ———— (அறும்பி/அரும்பி) விதிர்விதிர்த்துன்

40. நெகிழ என்பது ———— (தலர/தளர) என்னும் பொருள்படும்

41. சொல்லுக்குப் பொருள் தருக.

ஆநிரை

42. M.Sc. – பட்டப் படிப்பைத் தமிழில் எழுதுக.

43. பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.

பொரியல், அவியல், சித்திரை, சுண்டல்

44. பெயர்ச்சொல்லை எடுத்து எழுதுக.

குமரன் வருகிறான்

45. பொருத்தமான சொல்லை எழுதுக.

மல்லிகை ———— வீசியது. (மனம்/மணம்)

46. இரை, இறை – என்பதன் பொருளை எழுதுக.